Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 26 (12 - 10 - 1991) சனிக்கிழமை ஓசை: 236

## மீண்டும் அடுத்த மாதத்தில் நடமாடும் செயலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நடமாடும் செயலகம் அடுத்த மாதம் மீண்டும் இயங்கும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நடமாடும் செயலக அலுவலகம் எந்த இடத்தில் இயங்கும் என்று இதுவரை தீர்மானிக்கப்படாத போதிலும் பெரும்பாலும் தீவுப்பகுதி அல்லது வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இவ் அலுவலகம் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை யாழ் மாவட்டப் புனர்வாழ்வுப் பகுதியின் சில அலகுகள் வாராந்த அடிப்படையில் தொடர்ந்தும் நடமாடும் அலுவலகமாக செயற்படுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. (க)

## 1992 வரவு - செலவு திட்டம்

# சிறிலங்கா பாதுகாப்பு செலவினம் 1525 கோடி ரூபாவாக அதிகரிப்பு

### நடப்பு வருடத்தை விட 37 வீதம் கூடுதல்

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டு சிறிலங்கா வரவு செலவுத் திட்ட நகல் தீர்மானத்தில் பாதுகாப்புச் செலவினத்திற்கென சுமார் 1525 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினமான 10060 கோடி ரூபாவில் சுமார் 15,5 வீதமாகவுள்ள பாதுகாப்புச் செலவு இந்த வருடத்தை விட 400 கோடிக்கு மேல் அதிகமாகும்.

இந்த நகல் திட்டத்தின்படி 1991 ஆம் ஆண்டு மொத்தச் செலவுத் தொகையை விட 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் மொத்தச் செலவுத் தொகை சுமார் 20 வீதமாக அதிகரித்துள்ளது.

1992 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கச் செலவுத் தொகை 10060 கோடியே 13 லட்சத்து 6,600 ரூபா என்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட நகல் அறுபந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்க 1992 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அரசாங்க செலவுத்தொகையில் சேராத ஆனால் கபினற் அமைச்சர்களின் அதிகார வரம்புக்குட்படாதஜனாதிபதி செயலகம் தேசிய கல்வி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத்திலிருந்து அகதிகளை

## திருப்பி அழைக்க அரசாங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளை மீண்டும் இங்கு வரவழைப்பதற்கு அரசு பெரியளவிலான முயற்சிகளை மேற்கொண்டு வரும் அதேவேளை இந்த அகதிகள் தொடர்பான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தியாவில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளைத் தலைமன்னாருடாக வரவழைப்பதற்காக இங்கு இருக்கும் இறங்குதுறைப்பகுதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இங்கு வரவழைக்கப்படவிருக்கும் மக்களை அகதி முகாம்களை அமைத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால் 8 லட்சம் பேர் இடம்பெயர்வு

இதுவரையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளால் சுமார் எட்டு லட்சம் மக்கள் தத்தம் இல்லங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர் என செஞ்சிலுவைச் சங்கம் ஓர் அறிக்கையில் கூறியுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், இடம் பெயர்ந்தவர்களுக்காக 3400 இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், முல்லைத்தீவு பகுதியில் மட்டும் 35,000 பேர் அகதிகளாகி உள்ளதாகவும், யாழ்ப்பாணப் பகுதிகளுக்காக 750 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நம்பிக்கையில்லாப் பிரேரணையை

## ஆதரித்தும், எதிர்த்தும் வாக்களித்தோர் விபரம்

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பிரேரணையை எதிர்த்து அரச தரப்பில் 123 வாக்குகளும் ஆதரவாக 85 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 38 பெரும்பான்மை வாக்குகளால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு - கிழக்கு சுயேச்சைக் குழுவைச்சேர்ந்த இரு அங்கத்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கருணாகரன். ஜெ நில்லைநாதன், ஜோசப், மாவை சேனாதிராசா, சிறிநிவாசன் ஆகியோர் உட்பட அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற அங்கத்தவர்கள் சேர்ந்து பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அங்கத்தவர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், இரு. ராஜா புவனேஸ்வரன், இமானுவல் சில்வா, கே நவரத்தினம், பிறின்ஸ் காசிநாதர் ஆகியோர் தீர்மானத்திற்கு ஆதரவளித்து வாக்களித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிசில் 20,000 இல. தமிழர் அடைக்கலம் கோரியுள்ளனர்

(டில்லி)

சுவிற்ஸலாந்தில் சுமார் 20 000 இலங்கைத் தமிழர் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இந்தியாவில் அரசு முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் சுவிற்ஸலாந்து உப-ஜனாதிபதியும், வெளியுறவு அமைச்சருமான றெனி பெல்பர் செவ்வாயன்று புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவர்களில் ஒரு பகுதியினருக்கு அரசியல் புகலிடம் வழங்கி...கவில் தங்கியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ நா உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளதாக றெனி பெல்பர் தெரிவித்தார்.

தீவின் வட-கிழக்குப் பகுதிகளில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெறும் சண்டையைக் கருத்திற் கொண்டு இவர்களைத் திருப்பி அனுப்பும் திட்டத்தை ... அவர்.

பொதுவாக இலங்கைத் தமிழர் சமூகத்தினர் உள்ளூர் மக்களுக்குத் தொந்தரவு எதுவும் கொடுக்காமல் வாழ்ந்துவருகிறார்கள்.

இவர்களில் சிலர், மிகவும் குறைவான எண்ணிக்கையினர் போதைவஸ்து கடத்துதல், மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தஞ்சம் வழங்கியவர்களுக்கு சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப்பொருள்கள் பெறுமதியை உடன் குறைக்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருள்களின் பெறுமதியை உடன் குறைக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் வடபகுதியிலுள்ள அனைத்து மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் அவசர அறிவித்தல் ஒன்றின் மூலம் பணிப்புரை வழங்கியுள்ளார்...

குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த 84 ரூபா பெறுமதியான ஒரு வார கால உணவுப் பொருள்களை 75.60 ஆகவும், இரு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 154 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 138.60 ஆகவும், மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பத்...

## சபாநாயகருக்கு எதிராக

டங்களை நடைமுறைப்படுத்து வதற்கும் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

கப்படவிருக்கும் மக்களை அகதி முகாம்களை அமைத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால் 8 லட்சம் பேர் இடம்பெயர்வு

இதுவரையில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளால் சுமார் எட்டு லட்சம் மக்கள் தத்தம் இல்லங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர் என செஞ்சிலுவைச் சங்கம் ஓர் அறிக்கையில் கூறியுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், இடம் பெயர்ந்தவர்களுக்காக 3400 இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், முல்லைத்தீவு, பகுதியில் மட்டும் 35,000 பேர் அகதிகளாகி உள்ளதாகவும், யாழ்ப்பாணப் பகுதிகளுக்காக 750 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன எனவும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை

## ஆதரித்தும், எதிர்த்தும் வாக்களித்தோர் விபரம்

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமட் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பிரேரணையை எதிர்த்து அரச தரப்பில் 123 வாக்குகளும் ஆதரவாக 85 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 38 பெரும்பான்மை வாக்குகளால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு - கிழக்கு சுயேச்சைக் குழுவைச்சேர்ந்த இரு அங்கத்தவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த கருணாகரன், ஜே நிஸ்ஸைநாதன், ஜோசப், மாவை சேனாதிராசா, சிறிநிவாசன் ஆகியோர் உட்பட அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற அங்கத்தவர்கள் சேர்ந்து பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அங்கத்தவர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், இரா. ஜா புவனேஸ்வரன், இமானுவல் சில்வா, கே நவரத்தினம், பிறின்ஸ் காசிநாதர் ஆகியோர் தீர்மானத்திற்கு ஆதரவளித்து வாக்களித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிசில் 20,000 இல. தமிழர் அடைக்கலம் கோரியுள்ளனர்

(டில்லி)

சுவிற்ஸலாந்தில் சுமார் 20 000 இலங்கைத் தமிழர் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இந்தியாவில் அரசு முறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் சுவிற்ஸலாந்து உப-ஜனாதிபதியும், வெளியுறவு அமைச்சருமான றெனி பெல்பர் செவ்வாயன்று புதுடில்லியில் செய்தியாளர்மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இவர்களில் ஒரு பகுதியினருக்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் சுவிஸ் அரசுச் செலவில்முகாம் களில் தங்கியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ நா உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்பத் திட்டமிடப் பட்டுள்ளதாக றெனி பெல்பர் தெரிவித்தார்.

தீவின் வட-கிழக்குப் பகுதிகளில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இடம் பெறும் சண்டையைக் கருத்திற் கொண்டு இவர்களைத் திருப்பி அனுப்பும் திட்டத்தை சுவிஸ் அரசு இப்போதைக்கு கைவிட்டுள்ளது என்றார் அவர்.

பொதுவாக இலங்கைத் தமிழர் சமூகத்தினர் உள்ளூர் மக்களுக்குத் தொந்தரவு எதுவும்கொடுக்காமல்வாழ்ந்துவருகிறார்கள்.

இவர்களில் சிலர், மிகவும் குறைவான எண்ணிக்கையினர் போதைவஸ்து கடத்துதல், மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தஞ்சம் வழங்கியவர்களுக்கு சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் முகமட்டிற்கு தொண்டமான் வக்காலத்து

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச் முகமட் பதவி விலக வேண்டுமானால் அரசியல் குற்றப் பிரேரணையை இரகசியமாகத் தயாரித்த சகலரும் இராஜினாமாச் செய்யவேண்டுமென சுற்றுலாத்துறை அமைச்சரும், இ.தொ.கா. கட்சித் தலைவருமாகிய எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தமது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அப்படி அவர் இராஜினாமாச்செய்யவேண்டுமானால் ஜனாதிபதி மீதான அரசியல் குற்றச்சாட்டுப்பிரேரணை முன்னறிவித்தலை ரகசியமாகத் தயாரித்த சகலரும் தத்தமது எம்.பி பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும் எனத் தொண்டமான் தெரிவித்தார்.

## இனவாத யுத்தகளமாக பாராளுமன்றம் மாற்றக் கூடாது

**- காமினி பொன்சேகா**

(கொழும்பு)

"இனவாதம், குலவாதம், மதவாதம் ஆகியவற்றை ஏற்படுத்தி யுத்தகளமாக இந்த பாராளுமன்றத்தை மாற்ற யாரும் முற்படக்கூடாது" என்று பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற கூட்டஅமர்வை தொடக்கி வைக்கும்போது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

## 'குமாரி' இன்று வந்துசேரும்?

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு "குமாரி" என்ற கப்பல் ஒன்று இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களின் தொகுதி ஒன்று இக் கப்பலில் எடுத்துவரப்படுகின்றது. (அ)

## கப்பலில் ஓய்வூதியப் பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர்களுக்கான ஆகஸ்ட் மாத ஓய்வூதியப் பணம் இன்று பருத்தித்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப் படும் கப்பலில் எடுத்து வரப்பட இருக்கின்றது. பணம் வந்துசேர்ந்த பின்னரே ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை வங்கி மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (அ)

## நடப்பு வருடத்தை விட 37 வீதம் கூடுதல்

(கொழும்பு)

**1992 ஆம் ஆண்டு சிறிலங்கா வரவு செலவுத் திட்ட நகல் தீர்மானத்தில் பாதுகாப்புச் செலவினத்திற்கென சுமார் 1525 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தச் செலவினமான 10060 கோடி ரூபாவில்சுமார் 15,5 வீதமாகவுள்ள பாதுகாப்புச் செலவு இந்த வருடத்தை விட 400 கோடிக்கு மேல் அதிகமாகும்.**

இந்த நகல் திட்டத்தின்படி 1991 ஆம் ஆண்டு மொத்தச் செலவுத் தொகையை விட 1992 ஆம் ஆண்டுக்கானவரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் மொத்தச் செலவுத் தொகை சுமார் 20 வீதமாக அதிகரித்துள்ளது.

1992 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கச்செலவுத் தொகை 10060 கோடியே 13 லட்சத்து 6,600 ரூபா என்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட நகல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்க 1992 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அரசாங்க செலவுத்தொகையில் சேராத ஆனால் கபினற் அமைச்சர்களின் அதிகார வரம்புக்குட்படாதஜனாதிபதி செயலகம் தேசிய கல்வி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப்பொருள்கள் பெறுமதியை உடன் குறைக்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருள்களின் பெறுமதியை உடன் குறைக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் வடபகுதியிலுள்ள அனைத்து மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் அவசர அறிவித்தல் ஒன்றின் மூலம் பணிப்புரை வழங்கியுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் இதுவரை ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த 84 ரூபா பெறுமதியான ஒரு வார கால உணவுப் பொருள்களை 75.60 ஆகவும், இரு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 154 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 138.60 ஆகவும், மூன்று அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 210 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 189 ரூபா ஆகவும், நான்கு உறுப்பினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிராக உ. நீதிமன்றத்தில் வழக்கு

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமதுவின் நடவடிக்கைகளுக்கு சவால்விடும் வகையில் கொழும்பில் பிரபல வழக்கறிஞர்களில் ஒருவரான தர்மதாசா கோமிஸ் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணையை பாராளுமன்றத்தில் விவாதிக்க சபாநாயகர் அனுமதிக்க மறுத்தமையை எதிர்த்தே இவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

எதிர்க்கட்சிகளும், ஆளுங் கட்சி அதிருப்தியாளர்களும் முன்மொழிந்த ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பன தோல்வி கண்டமை தெரிந்ததே.

## லொறியை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு

(அனுராதபுரம்)

அனுமதிப்பத்திரம் இல்லாமலும் தடைசெய்யப்பட்ட பொருள்களை கொண்டு செல்வதாகவும் கூறி பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்ட ஒரு லொறியையும் 45பீப்பா மண்ணெண்ணையையும்விடுவிக்கவும் லொறி சாரதியையும் கிளீனரையும் விடுதலை செய்யும் படியும் அனுராதபுரம் நீதவான் பொலிசுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த லொறிகளுக்கு அனுமதிப்பத்திரம் இல்லை என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டபோதிலும் யாழ். அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாலும் வடபகுதிக்கு தடைவிதிக்கப்பட்ட 48 பொருள்களில் எவையும் லொறிக்குள் காணப்படாததால் உடனே லொறியையும் சாரதி கிளீனரையும் கொண்டு வந்த பொருள்களையும் விடுதலை செய்யும்படி நீதவான் உத்தரவிட்டார்.

மீனவர் மீது சிறிலங்கா கடற்படை தாக்குதல்

## இந்தியா கடும் ஆட்சேபம் நஷ்ட ஈடும் கோருகின்றது

(கொழும்பு)

இந்திய மீனவர்களைக் கடந்த மாதம் 19 ஆம் திகதி சிறிலங்கா கடற்படையினர் தாக்கியது தொடர்பாக இந்திய அரசு சிறிலங்காவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. கச்சதீவுக் கடற் பிரதேசத்தில் நடந்த இத்தாக்குதலினால் பாதிப்படைந்த மீனவர்களுக்கு சிறிலங்கா அரசிடமிருந்து நஷ்டஈட்டுத்தொகையையும் இந்தியா கோரியுள்ளது.

சிறிலங்காவிற்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் செறி ஜோர்ஜ் இந்தியாவின் ஆட்சேபனையைக் கொழும்பில் வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த அரசியல் விவகாரப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தார்.

சிறிலங்கா கடற்படையினர் அன்புறுத்திக் கடலில் தள்ளிய 24 மீனவர்களில் 3 பேர் உயிர் இழந்ததும், கரை சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

570693093V இலக்க அடையாள அட்டையும் வவுனியாவுக்கான பாஸூம் உடுப்புகள் அடங்கிய கைப்பை (பிளாஸ்ரிக்வயர்பாக்) யுடன் பழைய முருகண்டிக்கும் புதிய முருகண்டிக்கும் இடையில் 5-10-91இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஓமந்தை வட்டச் செயலகத்தில் அல்லது இரணைமடுச்சந்தி உதயா கபே குமார் வசம் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். கதிரவேலு கணேஸ்வரன். (R/1822)

**ரைப்ரைட்டர்**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், மற்றும் தமிழ்- ஆங்கிலம் ரைப்பிங் வேலைகளுக்கும்: பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி 3-ம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (R/1832)

**சாக்கு விற்பனை**

சழிவு சாக்குகள் தொகையாக விற்பனைக் குண்டு. வாங்க விரும்புவோர் சங்கத்தில் சாக்குகளைப் பார்வையிட்டு 1991.10 15-ம் திகதி மாலை 4 00மணிக்கு முன்னர் கூறுவிலையை சமர்ப்பிக்கவும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி திருநெல்வேலி. (B/3306)

## கல்முனைடிப்போ மக்கள் மயம்

(கல்முனை)

கல்முனை போக்குவரத்துச் சபை டிப்போ மக்கள் மயப்படுத்தப்படுமென சிறிலங்கா போக்குவரத்துத்துறை அமைச்சர் ஏ ஆர். மன்சூர் அறிவித்துள்ளார்.

---


Science Centre
Karaveddy
A/L 93

ஆரம்பம் – திங்கள்

14.10.93

3.00 — 4.00 பௌதிகம்
4.00 — 5.00 இரசாயனம்
5.00 — 6.00 கணிதம் / தாவரவியல்

(B/3298)



## கலை நிகழ்வு



கலா நிருத்யா மாணவர்கள் அளிக்கும்

# பரத நாட்டியம்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: 12-10-1991-சனிக்கிழமை (இன்று)
நேரம்: மாலை 2.30 – 5.30 மணிவரை

பிரதம விருந்தினர்
திரு. சுந்தரம் டிவகலாலா
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

ஆசியுரை: திரு. ந. வீரமணிஐயர் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

- செல்வி கவிதா குகதாஸன்
(நாட்டிய விஷாரதா, அடையாறு)

(R/1829)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 07 | 29 |
| – | – |
| 09 | 08 |
| – | – |
| 1974 | 1991 |

**வீரவேங்கை முகமது**
(வினாயகம் ஜெயபரன்)

எமது அருமை மகனே
அன்னியனை அழித்து அடிமை
விலங்குடைத்து
மண்ணை மீட்டுத் தமிழினம் காத்திட
அரும்பிலே குருதியால் அணைந்துவிட்ட
வீரனே
நாட்கள் பல சென்றாலும் ஆறாது
உம் நினைவு
மீண்டும் வா! தமிழ் மண்ணில்
சுதந்திரமாய்த் தவழ்வதற்கு.

பெற்றோர்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
அரசர்கேணி, நண்பர்கள்.
பளை. (R/1833)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை மாலினி**
(வாசுகி சிவாந்தம்)

வீர ஜனனம்: வீர மரணம்:


MODERN EDUCATION CENTRE
KARAVEDDY

கலை, வர்த்தக வகுப்புக்கள்

A/L 93

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல்: | திரு. பவான் |
| வர்த்தகம்: | பிரபல ஆசிரியர் |
| அளவையியல்: | திரு. விக்கி |
| இந்துநாகரிகம்: | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ்: | திரு நடா |
| அரசியல்: | திரு மார்க்கண்டு |
| புவியியல்: | திரு. கிருஸ்ணராஜா |

ஆரம்பம்: 14 . 10 . 91 பி. ப. 5 மணி

(B-3298)


## நினைவு கூருகின்றோம்...

**1991 - 10 - 12**

**லெப்.கேணல் விக்டர்**



1985ஆம் ஆண்டு [illegible] மன்னார், உயிலங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் சுற்றி வளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீர மரணமெய்திய

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத்துறை, மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார், அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய மன்னார் மாவட்டத் தளபதி

**லெப்.கேணல் விக்டர்** (மருசலின் பியூசிலஸ்-பனங்கட்டிக்கொட்டு மன்னார்)

**2-ம் லெப். றோம்**
(செல்வராஜா செல்வநாதன் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார்)

மன்னாரில் சிறிலங்காப் படையினருடனான

---

இந்த இடம் ஞாபகம் இருக்கிறதா?
உள்ளூர் உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.
யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கம்
தரும் புதிய உள்ளூர் உற்பத்தி
சுவையானது; வெளிநாட்டுப் பொருள்களுக்கு
நிகரானது; நீங்களே; மூக்கின்மேல் விரலை வைப்பீர்கள்
சற்றுப் பொறுமையை கையாளுங்கள்
இன்னும் சில தினங்கள் பொறுத்திருங்கள்
இந்த இடத்தில் உண்மை வெளிக்கும்

நன்றி

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம்

விளம்பர வடிவமைப்பு,

யாக விற்பனைக் குண்டு.
வாங்க விரும்புவோர் சங்கத்
தில் சாக்குகளைப் பார்வை
யிட்டு 1991.10 15-ம் திகதி
மாலை 4 00மணிக்கு முன்னர்
கூறுவிலையை சமர்ப்பிக்கவும்.
யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம், லாசாலை
வீதி திருநெல்வேலி.
(B/3306)

## கல்முனைடிப்போ மக்கள் மயம்

(கல்முனை)

கல்முனை போக்குவரத்துச் சபை டிப்போ மக்கள் மயப் படுத்தப்படுமென சிறிலங்கா போக்குவரத்துத்துறை அமைச்சர் ஏ ஆர். மன்சூர் அறிவித்துள்ளார்.

---

# நாட்டியம்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: 12-10-1991-சனிக்கிழமை (இன்று)
நேரம்: மாலை 2.30 – 5.30 மணிவரை

பிரதம விருந்தினர்
திரு. சுந்தரம் டிவகலாலா
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

ஆசியுரை: திரு. ந. வீரமணிஐயர் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

- செல்வி கவிதா குகதாஸன்
(நாட்டிய விஷாரதா, அடையாறு)

(R/1829)

---

இந்த இடம் ஞாபகம் இருக்கிறதா?
உள்ளூர் உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.
யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கம்
தரும் புதிய உள்ளூர் உற்பத்தி
சுவையானது; வெளிநாட்டுப் பொருள்களுக்கு
நிகரானது; நீங்களே; மூக்கின்மேல் விரலை வைப்பீர்கள்
சற்றுப் பொறுமையை கையாளுங்கள்
இன்னும் சில தினங்கள் பொறுத்திருங்கள்
இந்த இடத்தில் உண்மை வெளிக்கும்

நன்றி

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம்

விளம்பர வடிவமைப்பு,
செனித் ஜோ. எகட்டன்

(B/3288)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**93 ஆரம்பம்: 19.10.91** 8,00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருளியல் | : திரு. க. கலாகரன் | இந்து நாகரிகம் | | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| வர்த்தகம் | : திரு. தேவா | இந்துசமயம் | | |
| கணக்கியல் | : திரு. வன்னியசிங்கம் | தமிழ் | : | திரு. குழந்தை |
| அளவையியல் | : திரு. சுப்பிரமணியம் | புவியியல் | : | திரு. குணராசா |
| சரித்திரம் | : திரு. விஜயன் | அரசியல் | : | திரு. சீலன் |

குறிப்பு:

★ அனுமதிகளை முன்கூட்டிப் பெறவும். முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.
★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு O/L இலவச வினாவிடை வகுப்புக்களும் நடத்தப்படும்.

(B/3262)

---

சுதந்திரமாய்த் தமிழ்...

பெற்றோர்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
அரசர்கேணி, நண்பர்கள்.
பளை.
(R/1833)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை மாலினி**
(வாசுகி சிவாநந்தம்)

| வீர ஜனனம்: | வீர மரணம்: |
|---|---|
| 08.09.1974 | 13.09.1991 |

சன்னித் தமிழ் காக்க களமதிலே நீ குதித்தாய்
வன்னியிலே அவதரித்த வாசுகி நீ மாலினியாய்
கண்ணின் மணியெனவே கை ஆயுதத்தைப் பூசித்தாய்
மண்ணின் விடுதலையை மகிழ்வுடனே நேசித்தாய்
பெண்ணினத்தின் பெருமையினை பேருலகம் அறிந்திடவே
எண்ணமெல்லாம் தமிழீழம் என்றே நீ மரணித்தாய்
மண்ணிற்காய் மக்களுக்காய்
மாவீரர் பட்டியலில் நீ சேர்ந்தாய்

இன்றில்லை என்றோ ஒருநாள்
இந்த மண் மீதினிலே
இனியதொரு வைகறை புலரும்
இளம் சூரியனின் முகம் மலரும்
தனியொரு கதிராய் உன்
தளிர்மனம் விரிக்கும்
கனியென உந்தன்
கன்னங்கள் சிவக்கும்
நனியென உந்தன்
நல்லிதழ் சிரிக்கும்
வனிதையே உன்முகம்
மகிழ்பால் உவக்கும்

இவருடன் வீரமரணமெய்திய சகல வேங்கைகளின்
ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்

---

# கூறுகின்றோம்...

**1991 - 10 - 12**



லெப்.கேணல்
விக்டர்

1985ஆம் ஆண்டு இலுப்பைக்கடவை மன்னார், உயிலங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் சுற்றி வளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீர மரணமெய்திய

**பிறின்ஸ்லி** (பஸ்ரியன் குரூஸ் சகாயநாதன் - அரிப்புத்துறை, மன்னார்)

**யேசுதாஸ்** (தங்கவேல் ராமன் - அரிப்புத்துறை மன்னார்)

1986ஆம் ஆண்டு மன்னார், அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய மன்னார் மாவட்டத் தளபதி

**லெப்.கேணல் விக்டர்** (மருசலின் பியூசிலஸ் -பனங்கட்டிக்கொட்டு மன்னார்)

**2-ம் லெப். றோம்**
(செல்வராஜா செல்வநாதன் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார்)

மன்னாரில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**சந்துரு** (கணபதிப்பிள்ளை சந்திரன் - எருக்கலம்பிட்டி)

1987ஆம் ஆண்டு கோப்பாயில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**சாள்ஸ்/தயா** (பூபாலசிங்கம் சந்திரகுமார் மட்டுவில் தெற்கு)

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**பீலிக்ஸ் மெண்டிஸ்** (ஜீவரட்ணம் ஸ்ரீபன் குரூஸ் - வசாவிளான்)

**அகிலன்** (கணேசன் மகேந்திரன் - அரியாலை)

**ரஞ்சன்** (ராசரத்தினம் ராகவேந்தர் - சுன்னாகம்)

மல்லாகம், சுன்னாகம், கொல்லங்கலட்டி, பிரம்படி பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட குழந்தை, பெண் உட்பட 75 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**பிறேமன்** (சோமசுந்தரம் இளங்கோ-சங்கத்தானை, சாவகச்சேரி)

கட்டைபறிச்சானில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பழுகாமம் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூறுகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B.3305)

✲ சிந்தனைக்கு ✲

சொல்வது உபதேசம்
செய்வது உபத்திரவம்

— தாக்ஹேமர் ஷோலிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 12-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ.எண் 05

# அகதிகள் நிவாரணத்தில் மேலும் வெட்டு

வடக்கு - கிழக்கில் உள்ள அகதிகளுக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களின் பெறுமதியை உடன் குறைக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் வட - கிழக்கு அரசாங்க அதிபர்களுக்கு அவசரப் பணிப்புரைகளை அனுப்பி வைத்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதன் பிரகாரம் ஒரு அங்கத்தவருக்குரிய நிவாரணம் 84 ருபாவில் இருந்து ரூபா 75 60 ஆகவும், ஐந்து பேருக்கு மேற்பட்டவர்களுக்கான நிவாரணம் 315 ரூபாவில் இருந்து ரூபா 283.50 ஆகவும் குறைக்கப்படவுள்ளது.

இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகும். சில மாதங்களின் முன் தமது சொந்த இடங்களைவிட்டு இராணுவத்தினரால் விரட்டப்பட்டு, உடைமைகளை இழந்து தமது உறவினர்கள் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தவர்களின் நிவாரணத்தை நிறுத்திய சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது அகதிமுகாம்களில் உள்ளவர்களின் நிவாரணத் தொகையையும் குறைக்குமாறு பணித்துள்ளது. அகதிமுகாம்களிற்கு வெளியில் வாழ்பவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்பட்டபோது எழுந்த பலமான எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் சிறிலங்கா அரசாங்கம் நிவாரணத்தில் வெட்டு ஏற்படுத்துகின்றது. இதன்மூலம் தமிழ் மக்களை பட்டினி போட்டுச் சாகடிக்கப் பார்க்கின்றது. இது சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதச் சிந்தனையின் உச்சக்கட்டமாகும்.

இராணுவ நடவடிக்கையினால் விரட்டப்பட்ட மக்களுக்கு வாராந்த நிவாரணம் என அறிவித்த சிறிலங்கா அரசாங்கம் அதனை நிறைவேற்றவில்லை. போர் ஆரம்பித்த சுமார் எழுந்து வாரங்களில் வழங்கப்பட்ட கொடுப்பனவு மிகவும் சொற்பம் என்பது தெரிந்தும் தற்பொழுது அதிலும் வெட்டை ஏற்படுத்த முனைகிறது. இதற்கு வடக்கு கிழக்கில் தற்பொழுது தமிழர் மட்டுமே அகதி முகாமில் வாழ்வது காரணமாகும்.

வடக்கு - கிழக்கில் இப்பொழுது சிங்களவர் எவரும் அகதி முகாம்களில் இல்லை. கிழக்கில் தமிழர்கள் விரட்டப்பட்ட இடங்களில் சிங்களவர்கள் சகல வசதிகளுடனும், ஆயுதபாணிகளாகவும் குடியேற்றப்பட்டுவிட்டார்கள். அத்தோடு அவர்கள் வாழும் பகுதிகளுக்கு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்ற போர்வையிலும், ஜனசவிய திட்டம், அபிவிருத்தித்திட்டம் போன்றவற்றினாலும் வேறிய

# இரண்டாவது சபை அமைப்பதுபற்றி சர்வகட்சி மாநாட்டில் ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்காவில் இரண்டாவது சபையொன்றை அமைப்பது பற்றி சர்வகட்சி மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுவருவதாக சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்றவாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசியஅவர்மேலும் தெரிவிக்கையில், ஜனநாயகப்போக்கை வலுப்படுத்துவதற்கு இது ஒரு செயல்நுட்ப வழியாக இருக்கலாம் என்றும், எந்தவிதமான சட்டவாக்க அதிகாரங்களும் அற்றவகையில் இச்சபையை அமைப்பது பற்றி சர்வகட்சி மாநாடு விரிவாக ஆராய்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். அச்சபையில் அங்கத்தவர் எண்ணிக்கை நூறு ஆக இருக்கலாம் எனவும், மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அறிஞர்கள் புத்திஜீவிகளை உள்ளடக்கியதாக அமையும் என்றும் தெரிவித்தார்.

# திணைக்கள பொருள்களில் அதிகாரியின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் திணைக்களத்திற்காக கொள்வனவு செய்த பொருள்களை வீட்டிற்குக் கொண்டு சென்ற அதிகாரியொருவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட ஊழல் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த க பரமநாதன் திணைக்களத்திற்கென கொழும்பில் கொள்வனவு செய்த பொருள்களில் இரண்டுபரல்மண்ணெண்ணை மற்றும் முந்நூற்றி முப்பது கட்டி சவர்க்காரம் என்பவற்றை தமது வீட்டில் அதிகாலை மூன்று மணியளவில் கொண்டு சென்று இறக்கியுள்ளார். இப் பொருள்கள் கொழும்பில் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்

இக்களவுச் சம்பவம் பற்றிய புகார்கள் கிடைத்தமையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாக அறிய வருகின்றது

## அதிகாரிகளின் அசிரத்தையால்

# சினைப்பட்டிருந்த மாடு இறைச்சிக்கு வெட்டப்பட்டது

யாழ்ப்பாணத்தில் உள்ள இறைச்சிக் கடைக்காரர் ஒருவர் சினைப்பட்டிருந்த ஒரு பசுவை இறைச்சிக்காக வெட்டிய சம்பவம் ஒன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஊழல் குற்றத் தடுப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். வெட்டப்பட்ட பசுவின் வயிற்றுள் இருந்த கன்று சம்பந்தப்பட்ட நபரினால் வெட்டிப் புதைக்கப்பட்டிருந்தது.

இப் பசுவை வெட்ட முன், இறைச்சிக் கடைக்காரர் உரிய அதிகாரிகளிடம் இதைக்காட்டியும் அதிகாரிகளும் இவ்விதம் வெட்டப்படும்கால்நடைகளை பரிசோதிப்பதாகத் தெரியவில்லை. இவ்விடயம் சம்பந்தமான ஒழுங்குகளைப் பேண விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது.

# மாகாணசபை ஊழியர் வேதனத்திற்கு வரிவிலக்கு

(கொழும்பு)

மாகாணசபை ஊழியர்கள் அல்லது அவர்நில கடமையாற்றும் பகிரங்க சேவையலுவலர்கள் ஆகியோரின் வேதனங்கள், ஒய்வூதியம் மற்றும் இளைப்பாறும் தன்மையான கொடைகள் தொடர்பான வருமானங்களுக்கு வரி விதி விலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குவகை செய்யும் உள்நாட்டு அரசிறைச் சட்டதிருத்தச் சட்டமூலம் ஒன்று கடந்த புதன் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டது.

# வீட்டுத்தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கும் யாவரும்

# சோவியத்திற்கு 250 கோடி டாலர் ஜப்பான் நிதி உதவி

(டோக்கியோ)

ஜப்பானிய அரசாங்கம் இருநூற்றைம்பது கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான உதவியை சோவியத் யூனியனுக்கு வழங்கவுள்ளது.

இந்த உதவி பற்றி ஜப்பானிய அமைச்சரவையின் பிரதான செயலாளர் ஜப்பானிய தலைநகரான டோக்கியோவில் அறிவித்தார்.

அவர் மேலும் பணிதாபிமான உதவி, மருத்துவக் காப்புறுதி ஆகிய வடிவத்தில் ஜப்பான் வட்டியில்லாக் கடன்களை வழங்கும் இது சோவியத் யூனியனுடனான வர்த்தகத்தை உள்ளடக்கும். இந்த அவசரகால உதவியில் உணவு, மருந்துப் பொருள்கள் உட்பட ஏற்றுமதி, இறக்குமதி வங்கி வழங்கும்.

மனிதாபிமான உதவியில் குறைந்த வட்டியிலான கடன்களும் அடங்கும். இதற்கான இருபது கோடி டாலர் கடன் செலுத்தப்பட்டுள்ளது. ஜப்பானிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்காக ஏற்றுமதி, இறக்குமதி வங்கி மூலம் இருபது கோடி டாலர்களை ஜப்பான் வழங்கும். சோவியத் யூனியனுக்கு உதவுவதற்காக மேலும் நுட்ப உதவியையும் ஜப்பான் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

# மன்னார் அகதிகள் மீது இராணுவம் சித்திரவதை

(மன்னார்)

த்து வரும் செய்திகள் தெரி

# சுகாதார வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைஎல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் சுகாதாரம் பற்றிய அறிவை மேம்படுத்தும்முகமாகவும் அவைபற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கமாகவும் கொண்டு சுகாதார வினாவிடைப் போட்டி நடாத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாட்டு சிறுவர்நிதியத்தின் உதவியுடன் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது என்றும்-

பங்குபற்ற விரும்பும் யாழ். மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர், பங்கு பற்ற இருக்கும் இரு போட்டியாளரின் பெயர் விபரங்களை அனுப்பி வைக்குமாறும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகரசபை 'யூனிசெவ்' பகுதியுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முதலுதவிப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சிமன்ற பிரதேசத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் முதலுதவிப் பயிற்சிகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசமூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்காக 14 - 10 -91 தொடக்கம் 18-10 91வரை யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவிருக்கும் பயிற்சி நெறியில் பங்குபற்றலாம்

இதன் பிரகாரம் ஒரு அங்கத்தவருக்குரிய நிவாரணம் 84 ரூபாவில் இருந்து ரூபா 75 60 ஆகவும், ஐந்து பேருக்கு மேற்பட்டவர்களுக்கான நிவாரணம் 315 ரூபாவில் இருந்து ரூபா 283.50 ஆகவும் குறைக்கப்படவுள்ளது.

இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகும். சில மாதங்களின் முன் தமது சொந்த இடங்களைவிட்டு இராணுவத்தினரால் விரட்டப்பட்டு, உடைமைகளை இழந்து தமது உறவினர்கள் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தவர்களின் நிவாரணத்தை நிறுத்திய சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது அகதிமுகாம்களில் உள்ளவர்களின் நிவாரணத் தொகையையும் குறைக்குமாறு பணித்துள்ளது அகதிமுகாம்களிற்கு வெளியில் வாழ்பவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்பட்டபோது எழுந்த பலமான எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் சிறிலங்கா அரசாங்கம் நிவாரணத்தில் வெட்டு ஏற்படுத்துகின்றது இதன்மூலம் தமிழ் மக்களை பட்டினி போட்டுச் சாகடிக்கப் பார்க்கின்றது, இது சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாதச் சிந்தனையின் உச்சக்கட்டமாகும்.

இராணுவ நடவடிக்கையினால் விரட்டப்பட்ட மக்களுக்கு வாராந்த நிவாரணம் என அறிவித்த சிறிலங்கா அரசாங்கம் அதனை நிறைவேற்றவில்லை. போர் ஆரம்பித்து சுமார் எழுபது வாரங்களில் - வழங்கப்பட்ட கொடுப்பனவு மிகவும் சொற்பம் என்பது தெரிந்ததே. தற்பொழுது அதிலும் வெட்டை ஏற்படுத்த முனைகிறது. இதற்கு வடக்கு கிழக்கில் தற்பொழுது தமிழர் மட்டுமே அகதி முகாமில் வாழ்வது காரணமாகும்.

வடக்கு - கிழக்கில் இப்பொழுது சிங்களவர் எவரும் அகதிமுகாம்களில் இல்லை. கிழக்கில் தமிழர்கள் விரட்டப்பட்ட இடங்களில் சிங்களவர்கள் சகல வசதிகளுடனும், ஆயுதபாணிகளாகவும் குடியேற்றப்பட்டுவிட்டார்கள். அத்தோடு அவர்கள் வாழும் பகுதிகளுக்கு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்ற போர்வையிலும், ஜனசவிய திட்டம், அபிவிருத்தித்திட்டம் போன்றவற்றினாலும் போதிய நிதி கிடைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிலையிலேயே அகதிமுகாம்களில் உள்ளவர்களுக்கான தமிழர்களின் நிவாரணத்தில் கை வைக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டில், பாதுகாப்புச் செலவீனங்களுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியை விடப் பெருந்தொகையான நிதி பாதுகாப்புச் செலவீட்டிற்கு ஒதுக்கப்பட்டு விட்டது. சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட சேதங்கள் அதிகமாகவே இருந்தன. வரவு செலவுத் திட்டத்தில் 1178 கோடி ரூபா பாதுகாப்புச் செலவீட்டிற்கு ஒதுக்கப்பட்ட போதும், இவ்வருடத்தில் நடந்த ஆனையிறவு, மணலாறு பெரும் சமர்களுக்கு முன்னதாகவே 2 500 கோடி ரூபா பாதுகாப்புச் செலவீட்டிற்கு முடிவடைந்ததாக பிரதம மந்திரியும், நிதி அமைச்சரும், பாதுகாப்பு இணை அமைச்சருமான டி. பி. விஜயதுங்க தெரிவித்தார். அதன் பின்பு ஏற்பட்ட ஆனையிறவு, மணலாறு பெருஞ் சமர்களில் பெரும் தொகை பொருள் இழப்பை சிறிலங்கா இராணுவம் சந்தித்தது என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

இந்நிலையில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க தமிழரைப் பட்டினிபோட சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வறுமை ஒழிப்பு என்றும், ஜனசவிய என்றும், அபிவிருத்தி என்றும் பிரசாரம் செய்யும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையையும், நிவாரண வெட்டையும் ஏற்படுத்தி பட்டினி போட முற்படுகின்றது. இதன் மூலம் தமிழர் தேசிய போராட்டத்தை நசுக்கிவிட முற்படுகின்றது.

---

...லகத்தைச் சேர்ந்த ... பரம நாதன் திணைக்களத்திற்கென கொழும்பில் கொள்வனவு செய்த பொருள்களில் இரண்டுபரல் மண்ணெண்ணை மற்றும் முந்நூற்றி முப்பது கட்டி சவர்க்காரம் என்பவற்றை தமது வீட்டில் அதிகாலை மூன்று மணியளவில் கொண்டு சென்று இறக்கியுள்ளார். இப் பொருள்கள் கொழும்பில் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்

இக்களவுச் சம்பவம் பற்றிய புகார்கள் கிடைத்தமையைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட

...இறைச்சிக் கடைக்காரர் ஒருவர் சினைப்பட்டிருந்த ஒரு பசுவை இறைச்சிக்காக வெட்டிய சம்பவம் ஒன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர் வெட்டப்பட்ட பசுவின் வயிற்றுள் இருந்த கன்று சம்பந்தப்பட்ட நபரினால் வெட்டிப் புதைக்கப்பட்டிருந்தது.

இப்பசுவை வெட்ட முன், இறைச்சிக் கடைக்காரர் உரிய அதிகாரிகளிடம் இதைக்காட்டியும் அதிகாரிகளும் இவ்விதம் வெட்டப்படும் மாடுகளை பரிசோதிப்பதாகத் தெரிய

...மன ஒழுங்குகளைப் பேண விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது.

...யாழ் மாநகரசபை 'யூனிசெவ்' பகுதியுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சோவியத்திற்கு 250 கோடி டாலர் ஜப்பான் நிதி உதவி

(ரோக்கியோ)

ஜப்பானிய அரசாங்கம் இருநூற்றைம்பது கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான உதவியை சோவியத் யூனியனுக்கு வழங்கவுள்ளது.

இந்த உதவி பற்றி ஜப்பானிய அமைச்சரவையின் பிரதான செயலாளர் ஜப்பானிய தலைநகர் ரோக்கியோவில் அறிவித்தார்.

அவர் மேலும் பனிதாபிமான உதவி. மருத்துவக் காப்புறுதி ஆகிய வடிவத்தில் ஜப்பான் வட்டியில்லாக் கடன்களை வழங்கும் இது சோவியத் யூனியனுடனான வர்த்தகத்தை உள்ளடக்கும். இந்த அவசரகால உதவியில் உணவு, மருந்துப் பொருள்கள் உட்பட ஏற்றுமதி, இறக்குமதி வங்கி வழங்கும்.

மனிதாபிமான உதவியில் குறைந்த வட்டியிலான கடன்களும் அடங்கும். இதற்கான இருபது கோடி டாலர் கடன் செலுத்தப்பட்டுள்ளது. ஜப்பானிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்காக ஏற்றுமதி, இறக்குமதி வங்கி மூலம் இருபது கோடி டாலர்களை ஜப்பான் வழங்கும். சோவியத் யூனியனுக்கு உதவுவதற்காக மேலும் தொழில் நுட்ப உதவியையும் ஜப்பான் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

## முதலுதவிப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சிமன்ற பிரதேசத்திற்குட்பட்ட சன சமூக நிலையங்களில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் முதலுதவிப் பயிற்சிகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்களின் சமாச மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்காக 14 - 10 -91 தொடக்கம் 18-10 91வரை யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவிருக்கும் பயிற்சி நெறியில் பங்குபற்றலாம் என சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

## கொழும்புத்துறை வித்தியாலயத்தில் ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

யா. கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா கடந்த வியாழன் (3-10-91) காலை அதிபர் க. தவராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது

இக்கல்லூரி ஆசிரியர்கள் பெற்றோராலும், மாணவர்களாலும் கௌரவிக்கப்பட்டதுடன் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# மாநகரசபை ஊழியர் வேதனத்திற்கு வரிவிலக்கு

(கொழும்பு)

மாநகரசபை ஊழியர்கள் அல்லது அவர்நில கடமையாற்றும் பகிரங்க சேவையாளர்கள் ஆகியோரின் வேதனங்கள், ஓய்வூதியம் மற்றும் இவைபோன்ற தன்மையான கொடைகள் தொடர்பான வருமானங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குவகை செய்யும் உள்நாட்டு அரசிறைச் சட்ட திருத்தச் சட்டமூலம் ஒன்று கடந்த புதன் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டது.

## வீட்டுத்தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் வீட்டுத்தோட்டப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் வசிக்கும் யாவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். பங்குபற்றத் தகுதி உடையவர்களுக்கு சில விதைகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

போட்டிக்கான நிபந்தனைகளையும் ஏனையவிபரங்களையும் யாழ் மாநகராட்சி மன்ற ''யுனிசெவ்'' பகுதியுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இளைஞர் காலை இழந்தார்

கட்டுத்துவக்கு வெடித்ததால் வேட்டைக்குச் சென்றவர் தனது இடது காலை இழந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த என். பற்பகுமார் (வயது 20) என்ற இளைஞன் வேட்டையாடுவதற்காக அருகிலுள்ள காட்டிற்குள் சென்றபோது அங்கு மிருகங்களுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தார்.

இவர் தற்போது ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச.வ)

# மன்னார் அகதிகள் மீது இராணுவம் சித்திரவதை

(மன்னார்)

மன்னார்தீவில் இருக்கும் பேசாலையில ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினரால் (யு என்.எச் சி ஆர்) பராமரிக்கப்பட்டுவரும் அகதிமுகாமில் தங்கியுள்ளவர்கள் அவ்வப்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில் வாழும் தமிழ் பேசும் மக்களை கைது செய்யும் இராணுவத்தினர் அடித்து துன்புறுத்துவதாகவும் சித்திரவதைப் படுத்துவதாகவும் அத் தகவல்களிலிருந்து மேலும் தெரிய வருகிறது.

# இஸ்ரேலுடன் சோவியத் இராஜரீக உறவுகள்

(மொஸ்கோ)

இஸ்ரேலுடன் சோவியத் யூனியன் ராஜீயத்துறை உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளப் போவதாக சோவியத் வெளியுறவு அமைச்சர் பொரிஸ்பான்கின் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த பொரிஸ்பான்கின் இந்த மாத இறுதியில் நடைபெறுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் மேற்காசிய சமாதான மாநாட்டின்போது இஸ்ரேலுடன் முழு அளவிலான ராஜீய உறவுகள் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த வருடம் மொஸ்கோவில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்த முடிவின்படி சமாதான மாநாட்டை நடத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பரஸ்பர மாணவர் பரிவர்த்தனைத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் பரஸ்பரம் ஆசிரியர் மாணவர்களை பரிமாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த புதன் கொழும்பில் நடைபெற்ற கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நடனம், இசை, மற்றும் கலாசார துறைகளில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ரூமேனியதூதுவர்கடத்தலுக்கு பலர் உரிமை கோருகின்றனர்

(டில்லி)

டில்லியில் அண்மையில் கடத்திச் செல்லப்பட்ட ரூமேனிய தூதுவரக அதிகாரியான லீவியூராடுவைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கும் அதேவேளை இக்கடத்தலுக்கு பல்வேறு குழுக்கள் உரிமைகோரியுள்ளன.

லூதியானா நகரிலுள்ள பி.ரி.ஐ செய்தி நிறுவனத்திற்கு நேற்றுக் காலிஸ்தான் விடுதலைப் படையினரால் கொடுக்கப்பட்ட கடிதமொன்றில் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியாவின் கொலையில் குற்றஞ் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள மூவரைக் குறிப்பிட்டு இவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் கடத்தப்பட்ட தூதுவரக அதிகாரி கொலை செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிஸ்தான் விடுதலைப் புலிகள் படை ரூமேனியா ராஜதந்திரியை கடத்திச் சென்றிருப்பதாக பறை சாற்றிக் கொண்டிருப்பது வெறும் பொய் என்றும், கட்டிக்காட்டியுள்ள அக்கடிதத்தில் பிந்தரன்வாலா புலிகள்படை, காலிஸ்தான் கமாண்டோ படை சீக்கிய மாணவர் சம்மேளனம் (பலவீர் பிரிவு) பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு மூன்று அமைப்புகளாகும்.

## ஐ. நா. குழுவினரின் முறைகேடான செய்கைகள்

ஈராக்கிற்கு சென்ற ஐ.நா. அணுசக்தி பரிசோதகர் குழுவின அங்கத்தவர்கள் ஈராக்கில் முறைகேடான முறையில் நடந்தனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

குழுவின் ஒரு அங்கத்தவர் வாகனங்கள் நிறுத்தும் பகுதியின் மத்தியில் சுற்றிலும் குடும்பங்கள் வசிக்கும் சூழ்நிலையில், முழுநிர்வாணமாக உடலைக் கழுவியதாகவும்.

ஈராக்கிய அதிகாரிகள் தனிப்பட்ட உடைமைகளான கைப்பைகள், பெட்டிகள் ஆகியவற்றைத் திறத்தல், குடும்பப் படங்களைச் சோதித்தல், ஆய்வுகூட பெண் ஊழியர்களின் கோட்டுப் பைகளில் கையை புகுத்துதல், தனிப்பட்டவர்களின் கடிதஉறைகளைப் பிரித்தல் அவற்றை வாசித்து பிரதிசெய்தல், ஊழியர்களுக்குச் சொந்தமான வாகனங்களின் லைசன்ஸ் தகடுகளைப் புகைப்படம் எடுத்தல் போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா.பொதுக் காரியதரிசிக்கு ஈராக்கியவெளியுறவு அமைச்சர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## இன்று "வெளிச்சம்"

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை, இலக்கிய' சமூக இதழான "வெளிச்சம்" என்ற சஞ்சிகை இன்று வெளியிடப்படவிருக்கின்றது.

இன்றுகாலை 9 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இந்த இதழின் வெளியீட்டு விழா நடைபெறவிருக்கின்றது

### இந்தியா

மிகுதி 21 பேரை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலம் தமிழ்நாட்டிற்கு அனுப்பிவைத்ததும் தெரிந்ததே.

### சுவிசில்

இலங்கைத் தீவின் நிலைமை சீரானதும் தமிழ் அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆதரித்தும்

அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த திரு. லலித் அத்துலத்முதலி, காமினிதிசநாயக்கா எம். பிரேமச்சந்திரா, சமரவீரவன்னி, சந்திரா பண்டார, வின்சன் பெரேரா, பிரேமரட்ன குணசேகரா, லக்ஷ்மன் செனிவிரட்ன ஆகியோர் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்து வாக்களித்தனர்.

ஆரியரட்னா ஜெயதிலகா, மஹிந்தா சமரவீர, கே. முத்துபண்டா, விரான்லி செனிவிரட்ணா ஆகியோர் சபையின் வாக்கெடுப்பு நேரம் கலந்து கொள்ளவில்லை.

### சிறிலங்கா

அமைச்சுக்குழு ஆகியவற்றின் 1992 ஆம் ஆண்டிற்கான மூலதனம் மற்றும் குறை நிரப்புச் செலவினங்கள் மொத்தம் 67 கோடியே 86லட்சத்து 32,000 ஆயிரம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது.

1992-ஆம் ஆண்டிற்கான தேசிய பாதுகாப்புச் செலவு சுமார் 1525 கோடி ரூபாவாகும். பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ், முப்படைகள் ஆகியவற்றின் மூலதனச் செலவும், குறை நிரப்புச் செலவும் இத் தொகையில் அடங்கும். கடந்த வருடம் பாதுகாப்புச் செலவிற்கென 1107 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இது மொத்தச் செலவீட்டில் 12.5 வீதமளவில் இருந்தது. 1992 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில், பாதுகாப்பு செலவினம்15.5வீதமளவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, காணி நீர்ப்பாசன மற்றும் மகாவலி அமைச்சு, மின் சக்தி எரிபொருள்துறை அமைச்சு, வீடமைப்பு மற்றும் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு, தோட்டத்தொழில் அமைச்சு விவசாய அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஆராய்ச்சி அமைச்சு கைத்தறி நெசவுமற்றும்புடைவைத் தொழில் அமைச்சு, கப்பற் போக்குவரத்து துறைமுக அமைச்சுகளின் அபிவிருத்திக்காக 2185 கோடியே 60 லட்சத்து 88,000ஆயிரம்ரூபா செலவிடப்படவுள்ளது.

1992ஆம் ஆண்டிற்கான காலப்பகுதியில் வறுமை ஒழித்தல், ஜனசக்தித் திட்டத்துக்கென 450 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல், திறந்த சந்தைப் பொருளாதாரம், வறுமை ஒழிப்பு ஆகிய திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்கிறது. இதே வேளை வெளிநாட்டுக் கடன் பளுவை எவ்வாறு குறைப்பது என்பது பற்றிய ஆலோசனையை அரசாங்கத்துக்கு வழங்குவது பொருளியல் ஆலோசகர்களின் முக்கிய கடமையாகும்.

பாராளுமன்றத்தில் வரும் நவம்பரில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசும்போது பாதுகாப்புச் செலவினங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது குறித்தும், வெளிநாட்டுக் கடன் பளுபற்றியும் விமர்சிக்கப்படும்போது நிதி அமைச்சர் கண்டனங்களை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

1992 வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது 20 வீதமளவில் உள்ள பண வீக்கம் நிதி அமைச்சருக்கு எதிரான கண்டனக்குரல்கள் பாராளுமன்றத்தில் எழுப்பப்படுவதற்கான மற்றொரு காரணமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

### திருப்பி

அவற்றின் தங்கவைப்பதற்கும் விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக்குழு ஒன்றை சிறிலங்கா அரசு நியமித்துள்ளது. இக்குழுவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரி ஒருவரும் அங்கம் வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மக்களுக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய செயற் திட்டம் ஒன்றை அரசின் வேண்டுகோளின் பேரில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றது. (ஸ)

### நிவாரணப்பொருள்

கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 252 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 226.80 ஆகவும், ஐந்து உறுப்பினர்களும் அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 315 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 285.50 ஆகவும் குறைக்கும்படி அரசாங்க அதிபர்களை கேட்கப்பட்டிருக்கின்றது.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீர மரணம் |
|---|---|
| 22 — 11 — 1968 | 05 — 10 — 1989 |

கப்டன் ஆனந்தன்
(சுப்பிரமணியம் கருணாகரன்)
திதி: 12.10.1991

இரண்டாண்டு கழிந்தது
இன்னுயிர் நீ தந்து
மிரட்டிய அந்நியப் படைகளை
விரட்டிட பணி செய்த
வீரனே! உன் நினைவு
வரலாறாய் எம்மவர் மனத்
திரைகளில் நிறைகிறது.
ஈரம் சிந்தும் விழிகளை
விரல்கள் தடவும்! இந் நாளில்
திரமுடன் தோள்கள் நிமிரும்!!

அக்கா, ஐயா மற்றும் உன் வழியில் நிற்கும்
(B/3304) சகோதர சகோதரிகள், நண்பர்கள்

## 31 வது நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்



தாயக மண்ணில்

## தமிழீழ காவல் துறை
### பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக அலுவலர்
   (அ) கல்வித்தகைமை: ஆகக்குறைந்தது க. பொ. த. (உயர்தரம்)
   (ஆ) வயதெல்லை: 25 — 45 வரை
2. எழுது வினைஞர்
   (அ) கல்வித்தகைமை: க. பொ. த. (சா/த)சித்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) வயதெல்லை 18 — 35 வரை
3. தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்
   (அ) கல்வித்தகைமை: க. பொ. த. (சா / த) ஆறு பாடங்கள். தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) வயதெல்லை: 18 — 35வரை

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் 14-10-91, 15-10-91 ஆகிய இரு நாட்களிலும் நேரில் சமுகம் தரவும்.

நேரம்: காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
இடம்: தமிழீழக் காவல்துறைத் தலைமைச் செயலகம்

## 90ஆம்நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | | வீர மரணம் |
|---|---|---|
| 22 | | 05 |
| — | | — |
| 11 |  | 10 |
| — | | — |
| 1968 | | 1989 |

கப்டன் ஆனந்தன்
(சுப்பிரமணியம கருணாகரன்)
திதி: 12.10.1991

இரண்டாண்டு கழிந்தது
இன்னுயிர் நீ தந்து
மிரட்டிய அந்நியப் படைகளை
விரட்டிட பணி செய்த
வீரனே! உன் நினைவு
வரலாறாய் எம்மவர் மனத்
திரைகளில் நிறைகிறது.
ஈரம் சிந்தும் விழிகளை
விரல்கள் தடவும்! இந் நாளில்
திரமுடன் தோள்கள் நிமிரும்!!

அம்மா, ஐயா மற்றும் உன் வழிபிக திருகும்
(B/3304) சகோதர சகோதரிகள், நண்பர்கள்

## 31 வது நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 1975 | | 1991 |
| — | | — |
| 03 |  | 09 |
| — | | — |
| 08 | | 12 |

### வீரவேங்கை நெல்சல்
(க. தர்மலிங்கம் ராஜ்குமார்)
குமுளமுனை

ஆண்டுகள் பதினாறு
வீரத்தாயின் மடியில்
தமிழினத்தின் விடிவிற்காய்
தாயகம் காக்கப்புறப்பட்டாய்
எதிரியின் கதையை முடிக்க
கானகம் சென்றாய்
வெற்றியுடன் திரும்புவேளை
குண்டொன்று உனதுயிரை மாய்த்தது
உனது இறுதி இலட்சியம்
நிறைவேறும் நாள் வெகுதூரத்திலில்லை
என்றுமே எங்கள் உயிரோடு நீ வாழ்வாய்

உன் பிரிவால் வாடும்
இ. இராஜேந்திரன் (ஜெயா) அத்தான்
குமுளமுனை. மற்றும் குடும்பத்தினர்
(B/3309)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...வழியர்களுக்குச் சொந்தமான வாகனங்களின் வைசன்ஸ் தகடுகளையும் புகைப்படம் எடுத்தல் போன்ற அடாவடித் தனங்களில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா.பொதுக் காரியதரிசிக்கு ஈராக்கியவெளி யுறவு அமைச்சர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

விரவன்னி, சந்திரா பண்டார, வின்சன் பெரேரா, பிரேமரட்ண குணசேகரா, லக்ஷ்மன் செனிவிரட்ணா ஆகியோர் தீர்மானத்திற்கு ஆதரவு அளித்து வாக்களித்தனர்.

ஆரியரட்ணா ஜெயதிலகா, மஹிந்தா சமரவீர, கே. முத்து பண்டா, விராஜ்லி செனிவிரட்ணா ஆகியோர் சபையின் வாக்கெடுப்பு நேரம் கலந்து கொள்ளவில்லை.

## தமிழீழ காவல் துறை
### பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக அலுவலர்
   (அ) கல்வித்தகைமை: ஆகக்குறைந்தது க. பொ. த. (உயர்தரம்)
   (ஆ) வயதெல்லை: 25 — 45 வரை
2. எழுது வினைஞர்
   (அ) கல்வித்தகைமை: க. பொ. த. (சா/த)சித்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) வயதெல்லை 18 — 35 வரை
3. தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்
   (அ) கல்வித்தகைமை: க. பொ. த. (சா / த) ஆறு பாடங்கள். தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) வயதெல்லை: 18 — 35வரை

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் 14 - 10 - 91, 15-10-91 ஆகிய இரு நாட்களிலும் நேரில் சமுகம் தரவும்.
நேரம்: காலை 9'00 மணி முதல் 12.00 மணி வரை
இடம்: தமிழீழக் காவல்துறைத் தலைமைச் செயலகம்

பொறுப்பாளர்
(B/3312) தமிழீழ காவல்துறை

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

### லெப். அகிலன்
(கணேசன் மகேந்திரன்
13, அகிலன்வீதி, அரியாலை)



வீர ஜனனம் 11.12.66
வீரமரணம் 12.10.87

(இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணம்)

அந்நிய ஆக்கிரமிப்பை
அழித்தொழித்திடவே — நீர்
சிந்திய செங்குருதி காட்டும்
பாதையில் பயணம் தொடருது
செங்களமாடிடும் வீர
வேங்கையர் படை
வென்றிடும் நாளில்
உங்கள் நாமம் வரலாறாகும்.

(B-3318) குடும்பத்தினர், நண்பர்கள்.

இம்மக்களுக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய செயற் திட்டம் ஒன்றை அரசின் வேண்டுகோளின் பேரில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றது. (அ)

### நிவாரணப்பொருள்


கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 252 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 226.80 ஆகவும், ஐந்து உறுப்பினர்களும் அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் கொண்ட குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த 315 ரூபா பெறுமதியான நிவாரணத்தை 285 50 ஆகவும் குறைக்கும்படி அரசாங்க அதிபர்களை கேட்கப்பட்டிருக்கின்றது.

...ஆலோசகர்களின் முக்கிய கடமையாகும்.

பாராளுமன்றத்தில் வரும் நவம்பரில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துப் பேசும்போது பாதுகாப்புச் செலவினங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது குறித்தும், வெளிநாட்டுக் கடன் பளு பற்றியும் விமர்சிக்கப்படும்போது நிதி அமைச்சர் கண்டனங்களை சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

1992 வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது 20 வீதமளவில் உள்ள பண வீக்கம் நிதி அமைச்சருக்கு எதிரான கண்டனக்குரலைக் பாராளுமன்றத்தில் எழுப்பப்படுவதற்கான மற்றொரு காரணமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 26 . 12 . 1964 | 16 . 07 . 1991 |

### கப்டன் டயஸ்
[ஜஸ்ரின் றோய் லெலிடன்]
(ஊர்காவற்றுறை)
கட்டைக்காடு நேரடி மோதலில் வீரமரணம்

மிடிமையே கொடுக்கும் குடியையே கெடுக்கும்
அடிமை வாழ்வும் ஒரு வாழ்வா? - நம்
கொடியதனை அறுக்க உரிமைக் கொடி பறக்கக்
கூடிப்படை எடுத்தல் தாழ்வா?

ஒரு குடி ஓரினம்! ஒரு மொழிகொண்டவர்
ஒன்றுபட்டார் என்ற பேச்சு - நேர்
திருவிலாப் பகைவர் செவியினில் வீழட்டும்
தீர்ந்து போகும் அவர் மூச்சு!

உருவற்றுப் போகட்டும் தமிழினம் என்றென்றே
ஓயாது உழைக்கும் ஒரு கோட்டி - அதன்
கருவற்றுப் போம்படி செய்வோம் நமக்குள்ள
கைகள் எட்டுக் கோடி சட்டி!
B/1831

திவக மக்கள்